**கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 5286 /அ1/20 20 நாள்.27.07.2021**

*******

**பொருள்** : பள்ளிக் கல்வித் துறை – பொதுப் பணிகள் – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.பி.ஏசுதாசன் என்பவரின் வாரிசுதாரர் திரு.ஒய்.ஜெய்சன் இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு

**பார்வை** :

1. குழித்துறை மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க. எண். 6905/அ1(இ1)/2013 நாள்05.06.2017
2. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 26.02.2021
3. சென்னை - 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந. க. எண். 21925/ஜே/இ4/2021 நாள் 09.04.2021
4. திருவட்டார் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க. எண். 2714/அ1/2020 நாள்14.09.2020

*******

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டம், கொல்லங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளியில் உடற்கல்வியாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில்19.03.2011 அன்று காலமான திரு.பி.ஏசுதாசன் என்பவரின் வாரிசுதாரர் திரு.ஒய்.ஜெய்சன் என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிமாக நியமனம் செய்யப்பட்டு 06.06.2017 முற்பகல் முதல் மார்த்தாண்டம் அரசு (ம) மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல், கீழ்காணுமாறு தெரிவக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித் தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கிழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய

Scanned with CamScanner

செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித் தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில், பார்வை 2ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு.ஒய்.ஜெய்சன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 06.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி, திரு.ஒய்.ஜெய்சன் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

30/07/2021

முதன்மைக் கல்வி அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

30/7/21

**பெறுநர்**

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக).

**நகல்**

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
திருவட்டார்

2. தலைமையாசிரியர்,
அரசு (ம)மேல்நிலைப்பள்ளி,
மார்த்தாண்டம்

Received my copy
24/8/2021

Scanned with CamScanner